செய்தி வெளியீடு எண்: 398 நாள்: 04.07.2019

# செய்தி வெளியீடு

சுயநிதி கல்லூரிகளில், அரசு ஒதுக்கீட்டு இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியருக்கு 2010–2011 ஆம் கல்வியாண்டு வரை அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் விதிக்கப்படும் கல்வி கட்டண அளவிற்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது. 2011–2012ஆம் கல்வியாண்டு முதல் சுயநிதி கல்வி நிறுவனங்களில் நிர்வாக ஒதுக்கீட்டில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியருக்கும் திரும்ப செலுத்தப்படாத அனைத்து கட்டாய கட்டணங்களையும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வெளியிட்டு வரலாற்றுச் சாதனை படைத்தார்கள்.

எனினும், சில சுயநிதி கல்வி நிறுவனங்கள் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் செய்த முறைகேட்டினை தடுக்கும் பொருட்டு, நிர்வாக ஒதுக்கீட்டில் பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகையை அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைக்கு மிகாமல் 2017–2018ஆம் ஆண்டு முதல் வழங்க அரசாணை(நிலை) எண்கள். 51 மற்றும் 52, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை, நாள் 11.08.2017–இல் தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. மேலும், 2018–2019ஆம் ஆண்டு முதல், மத்திய

அரசு சுயநிதி கல்வி நிறுவனங்களின் நிர்வாக ஒதுக்கீட்டில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதை அனுமதிக்கவில்லை.

எனவே, 2017–2018ஆம் ஆண்டில் சுயநிதி கல்வி நிறுவனங்களின் நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்ந்த மாணவர்களுக்கு முன்பு இருந்ததுபோல திரும்ப பெறப்படாத கட்டாய கட்டணங்கள் அனைத்தையும் கல்வி உதவித்தொகையாக வழங்க வேண்டும் என பல்வேறு கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றதன் அடிப்படையிலும், மாணாக்கர்களின் சிரமத்தை போக்கவும், அவர்களின் கல்வி நலன் கருதியும் 2017–2018ஆம் ஆண்டில் மேற்படி அரசாணை வெளியிடுவதற்கு முன்னர், அதாவது **11.08.2017 முன்னர் சுயநிதி கல்வி நிறுவனங்களின் நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்க்கை பெற்ற மாணாக்கர்களுக்கு கட்டண நிர்ணயக் குழு நிர்ணயம் செய்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கல்வி கட்டணத்தினை முழுவதுமாக வழங்குமாறு தற்போது தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.**

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**